**தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியம் - 2013**

---

தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று மற்றும் செயற்பாட்டுக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் திறைசேரிச் செயலாளர் மற்றும் தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியத்தின் பொறுப்பாளர்களான கமத்தொழில், காணி மற்றும் வனவள அமைச்சுச் செயலாளர், கமத்தொழில் திணைக்களத்தின் தாவரவியல் பூங்கா பணிப்பாளர், திறைசேரிப் பணிப்பாளர் மற்றும் கமத்தொழில் பணிப்பாளர் நாயகத்திற்கு இடையே 1996 திசெம்பர் 20 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் (4)(ஜே) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின்

ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தாவரவியற் பூங்கா நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதியத்தின் நேரடி ஏற்பாட்டைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்களின் பொருளாதார ஆயுட்காலம் கருத்திற்கொள்ளப்பட்டு பெறுமானத் தேய்வு கழிக்கப்பட வேண்டிய போதிலும் கட்டிடத்திற்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 2 (காசுப்பாய்ச்சல் கூற்று) இன் பிரகாரம் செயற்பாடுகள், முதலீடுகள் மற்றும் நிதிச் செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல் வெவ்வேறாகக் காண்பிக்கக்கூடிய வகையில் நிதியத்தின் காசுப்பாய்ச்சல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 650,914 தொகையான மலர் வளர்ச்சி ஆலோசனைப் புத்தக இருப்பு நிதிக்கூற்றுக்களில் ரூபா 698,607 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டின் செயற்படு இலாபம் ரூபா 47,693 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டின் போது டொரிங்டன் "சுவஹஸ்" மலர் வளர்ப்புப் பிரிவில் பூக்களுக்கும் வேறு பயிரினங்களுக்கும் ஏற்பட்டிருந்த ரூபா 56,150 தொகையான நட்டம் கணக்குகளிற்குக் கொண்டுவரப்படாது மிகுதி இருப்புகள் கணக்குகளில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின்

திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையிருப்புகள் மற்றும் திரண்ட நிதியம் அப் பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் காண்பிக்கப்பட்ட நிலையான சொத்துக்களின் கிரயத்திற்கும் நிலையான சொத்துப் பதிவேடுகளுக்கும் இடையே ரூபா 10,411,863 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் காண்பிக்கப்பட்ட ரூபா 113,549,907 தொகையான ஆறு நிலையான சொத்துக்களுக்கு உரித்தான பட்டோலைகள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தாவரவியற் பூங்கா நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஸ்தாபிப்பட்ட உடன்படிக்கையின் 3(ஜீ)(1) ஆம் பந்தியின் படி பொறுப்புச் சபை 03 மாதத்திற்கு ஒரு முறையேனும் கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 03 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 89,368,125 மிகையொன்றாக இருந்ததுடன், அதனையொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 66,186,911 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 23,181,214 தொகையான அதிகரிப்பு காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நுழைவுச் சீட்டு வருமானம் ரூபா 7,813,280 ஆல் அதிகரித்து மீண்டெழும் செலவினம் ரூபா 15,301,649 தொகையால் குறைவடைவது இவ் அதிகரிப்பிற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

மொத்தச் சொத்துக்களுடன் நடைமுறைச் சொத்துக்கள் ஒப்பிடப்படுகையில் 46.09 சதவீதமானதுடன் இதில் 12.05 சதவீதம் திரண்ட வருமானத்தின் மூலம் தெளிவாகியிருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

ஹக்கல தாவரவியல் பூங்கா நிர்மாணிப்பிற்காக விலைமனுக் கோரலுக்காக பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலில் ஏற்பட்ட தவறைச் சீர்செய்வதற்காக மீளப்

பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்க நேர்ந்ததுடன் இதற்காக ரூபா 47,040 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.2 தீர்க்கப்படாத பொறுப்புகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் 7 சந்தர்ப்பங்களில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்த நிர்மாணிப்பு ஒப்பந்தங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய 1 வருடம் கடந்த கையிலுள்ள காசு ரூபா 3,202,682 தொகை உத்தரவாதக் காலம் கடந்திருந்த போதிலும் தீர்க்கப்படாது கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**4.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த 5 பாதீட்டு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 12,710,000 தொகையான மொத்த நிதி ஏற்பாட்டில் ரூபா 11,187,713 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் படி, பயன்படுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா 1,522,287 தொகையானதுடன் இது ஒவ்வொரு விடயத்திற்காகவும் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் 0 சதவீதத்திற்கும் 30 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| | செயற்பாடு | நிதி ஏற்பாடு | 2013 திசெம்பர் 31 ஆம் திகதி பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட ஏற்பாடு | சேமிப்பு | ஏற்பாட்டுப் பயன்பாடு சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | |
| (i) | பூங்கா அலங்கரிப்பு | 3,310,000 | 170,120 | 3,139,880 | 5.1 |
| (ii) | புதிய புத்தகங்களும் அச்சீட்டுப் பொருட் கொள்வனவும் | 1,000,000 | 70,337 | 929,663 | 7.0 |
| (iii) | காணி எல்லைகளைத் தீர்மானித்தல் | 4,000,000 | 678,720 | 3,321,280 | 17.0 |
| | தேசிய பயிர் வளர்ப்பு நிலையம் | | | | |
| (iv) | தாவரவியல் ஆய்வு | 2,000,000 | 603,110 | 1,396,890 | 30.0 |
| (v) | கூரைப் பழுதுபார்த்தல் | 2,400,000 | - | 2,400,000 | 00.0 |
| | | 12,710,000 | 1,522,287 | 11,187,713 | |

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்

பொறுப்பு நிதியம் 1998 ஆம் ஆண்டு முதல் செயற்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை.

### 5.2 கொள்வனவுத் திட்டம் தயாரித்தல்

மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு அவ்வப்போது சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் மீதான விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு